பத்தாம் அத்தியாயத்தின் பரம ஸாரம்

பரந்தாமன் பகர்கிறான்—பார்த்த!உன்னுடைய நன்மையைக் கருதி
மேலும் சில முக்கியமான விஷயங்களைக் கூறுகிறேன் கேள்

பார்த்தன் வினவுகிறான்—என்னிடத்தில் என்ன சிறப்பைக் கண்டு மேன்மேலும்
உபதேசித்து வருகிறாய்.

பகவான்—"அர்ஜுன!நீ என் பெருமைகளைக் கேட்டு அஸூயயை கொள்ளாமல்
மிகவும் சந்தோஷப்படுகிறாய் என்பதை உன் முகமலர்ச்சியைப்
பார்த்து தெரிந்துகொண்டேன்.ஆகையால் உன்னைப் போன்ற அதிகாரி
கிடைப்பது அரிது என்று தீர்மானித்தே அதிரஹஸ்யமான விஷயங்களைக்
கூறத் தொடங்கினேன்" என்றான்

கண்ணுக்குப் புலப்படாதவற்றையெல்லாம் காணும் சக்தி பெற்றவர்களான
தேவ ரிஷிகள்கூட என் பெருமையை பூரணமாக உணர முடியாது.அவர்களுடைய
புத்தி எத்தகையது என்று எனக்குத் தெரியுமே.அவர்களுடைய கர்மாவுக்கு
ஏற்றவாறு நான் கொடுத்த அறிவு,என்னைப் பரிபூர்ணமாக உணர்வதற்குப்
போதுமானதன்று.

விஜயன்—கண்ணா!தெளிவான அறிவைப் பெற்றவர் யார்?

பகவான்—பாண்டவ!கர்மத்தால் ஏற்படும் பிறவி எனக்கு இல்லை என்பதைத்
தெரிந்துகொள்பவனே அறிவாளி.

அர்ஜுனன்—"வாஸுதேவ!கர்மத்தால் ஏற்படும் பிறவி முக்தர்களுக்குக் கூட
இல்லையே.அவர்களுக்கும் உனக்கும் என்ன வாசி?

வாஸுதேவன்—விஜய!முக்தர்கள்,முக்தி பெறுவதற்கு முன் கர்மாதீனமாகப்
பல பிறப்பைப் பெற்றவர் தாம்.நான் அப்படியன்று.கர்மாதீனமான பிறவி
எனக்கு எப்பொழுதுமே கிடையாதே.

பார்த்தன்—கண்ணா!நித்யஸூரிகளுக்குக்கூட கர்மாதீனமான பிறவி கிடையாதே.
அவர்களுக்கும், உனக்கும் என்ன வ்யத்யாஸம்?

கிருஷ்ணன்—"பல்குண!நான் லோக மகேஷ்வரன்;அயர்வறு மமரர்களுக்கு அதிபதி.
நித்யஸூரிகளும் எனக்குப் பரதந்த்ரரே.எனவே நான் ஸர்வ விலக்ஷணன் என்று
அறிபவனே,பக்தி விரோதியான பாவங்களிலிருந்து விடுபடுவான்"என்றான்

அர்ஜுனன்—"கண்ணா!பக்தி வளர்வதற்கான வழியையும் கூறு" என்றான்

பகவான்—பார்த்த!மனத்திற்குள்ள நிரூபிக்கும் திறமை,சேதனம்,அசேதனம்
இவற்றைப் பற்றித் தெளிவு,ஒன்றை வேறொன்றாக நினையாமை,பொறுமை
முதலிய பலவகையான மன நிலைகள்,பிராணிகளுக்குள் என் மூலமே
உண்டாகின்றன என்ற தெளிவு பிறந்தவனுக்குப் பக்தி வளரும்

அர்ஜுனன்—"வாஸுதேவ!எல்லாம் உன் அதீனம் என்பது எப்படி சங்கதமாகும்?
பிரம்மா படைக்கிறார்;மங்வாதிகள் ரக்ஷிக்கின்றனர் என்று கூறுகின்றனரே,அந்தச்
செயல் உன் அதீனமாக எப்படி ஆக முடியும்?

பகவான்—பார்த்த!ப்ருகு,மரீசி,புலஸ்த்யர்,புலஹர்,க்ரது,அத்ரி,வஸிஷ்டர் இவர்கள்
ஸ்ருஷ்டிக்குப் பிரவர்த்தகர்கள்.ப்ரஹ்மஸாவர்ண மநு,ருத்ரஸாவர்ண மநு,தர்ம ஸாவர்ண
மநு,தக்ஷஸாவர்ண மநு இவர்கள் நித்ய ஸ்திதிக்குப் பிரவர்த்தகர்கள்.இவர்களை பிரம்மா
தம் ஸங்கல்பத்தால் படைத்தார்.இவர்கள் யாவரும் என் திருவுள்ளப்படியே

நடப்பவர்கள். ஆகையால் எல்லாமே என் அதீனம்தான் என்பதில் கூடாதொன்றும் இல்லை. பிரம்மாவுக்கு உள்ள,பிறரைப் படைக்கும் ஆற்றலும் என் அநுக்கிரகத்தால் ஏற்பட்டதே.

அர்ஜுனன்-பரந்தாமா!தட்டுத் தடங்கல் இல்லாத பக்தியோகம் எப்பொழுது நிஷ்பன்னமாகும்?

பகவான்-பார்த்த!என் ஐஷ்வர்யத்தையும் யோகத்தையும் உள்ளபடி அறிபவன்,தட்டுத் தடங்கலற்ற பக்தியோகத்தைப் பெறுவான். இதில் ஸந்தேகமில்லை. இதைக் கண்கூடாக நீ காண்பாய். விபூதி:ஐச்வர்யம். அதாவது யாவற்றினடையவும் ஸவ்ருப ஸ்திதி ப்ரவ்ருத்திகள் என்
அதீனம் என்பதே. யோகமாவது-பிறருடைய தோஷங்களை விலக்குபவனுகவும் எண்ணற்ற கல்யாண குணக்கூட்டங்கள் நிறைந்தவனுகவும் இருத்தல்.

அர்ஜுனன்-"கண்ணு!பண்டிதர்கள் உன்னை எவ்விதம் உபாஸிக்கின்றனர்?நீ அவர்களுக்குச் செய்யும் நன்மை யாது?"என்றுன்.

கண்ணன்-யாவற்றையும் படைப்பவன் நான்;எல்லாம் என்னுலேயே செயல்படுகினறன் என்ற என்னுடைய ஸ்வபாவிகமான ஐச்வர்யத்தையும்,என்னுடைய ஸௌசீல்யம் முதலிய கல்யாண குணங்களையும் நன்றுகத் தெளிந்து என்னைக் கல்யாண குணம் முதலியவற்றுடன் கூடினவனுகப் பக்தியுடன் உபாஸிக்கின்றனர்.

அர்ஜுனன்-கண்ணு!அவர்களுடைய பக்தி எத்தகையது என்பதைச் சற்று விளக்கு

வாஸுதேவன்-அர்ஜுன!அவர்களின் மனம் எப்பொழுதும் என்னிடமே பதிந்திருக்கும். என்னை நினைக்காமற் போனுல் அவர்கள் உயிர் தரிக்காது. தாங்கள் அநுபவித்த குணங்களைப் பரஸ்பரம் தெரிவித்துக்கொண்டும்,தெரியாத விஷயங்களை அறிவித்துக்கொண்டும் நல்ல முறையில் காலத்தைக் கழிக்கின்றனர். சொல்பவர்கள் சொல்வதையே பலனுகக் கருதி ஸந்தோஷிக்கின்றனர். கேட்பவரும் கேட்பதையே பலனுகக் கருதி ஸந்தோஷிக்கின்றனர்.

என்னுடன் எப்பொழுதுமே சேர்ந்திருக்கவேண்டும் என்று விரும்பும் அன்பர்களுக்கு,என்னைப் பெருவதற்கு ஸாதனமான முதிர்ந்த பக்தியை நானே அன்புடன் கொடுக்கிறேன். என்னைப் பூஜிப்பதற்குத் தடங்கலாக உள்ள மற்ற விஷயங்களில் பற்றை நானே விலக்குகிறேன். அவர்கள் மனத்தில் பதிந்தவனுய் ,உஜ்வலமான ஜ்ஞானதீபத்தை ஏற்றி அவர்களை அநுக்கிரகிக்கிறேன்.

அர்ஜுனன்-கண்ணு!வேதாந்தங்களில் "பரப்ரஹ்மம்" என்றும்,"பரஞ்சோதி" என்றும்,"பரமபவித்திரம்" என்றும் ஓதப்பெற்றவன் நீயே,ரிஷிகள் அனைவரும் உன்னைப் "புருஷன்"என்றும் "நித்யன்" என்றும், "பரமபதனிலையன" என்றும் "யாவற்றுக்கும் முதலாகி படைப்பு முதலிய வியாபாரங்களை விளையாட்டாகச் செய்பவன் என்றும்"பிறப்பற்றவன்" என்றும்,"எங்கும் பரந்திருப்பவன்" என்றும் கூறுகின்றனர்.

தேவரிஷியாகிற நாரதர்,அஸிதர்,தேவலர்,வியாஸர் இவர்களும் உன்னை அப்படியே கூறுகின்றனர். நீ எங்கெங்கு என்ன என்ன அம்சத்துடன் திகழ்கிருய் என்பதைத் தேவர்களோ தானவர்களோ இவர்களில் யாருமே அறிய முடியாது. நீ எந்த நியமன விசேஷங்களைக் கொண்டு இந்த உலகங்களில் வியாபித்திருக்கிருயோ அந்தத் திவ்யமான நியமன விசேஷங்களை உபதேசிக்க வேண்டும் புத்தி,ஜ்ஞானம் தவிர மற்ற எந்த வஸ்துக்களில் உன்னுடைய விசேஷ நியமனம் உள்ளது?
பக்தியோகம் செய்வதில் விழைகிற நான் உன்னை எப்பொழுதும் சிந்தித்தவண்ணம் இருக்க உன்னை எவ்வாறு அறிய வேண்டும்.

## பத்தாம் அத்தியாயத்தின் பரம ஸாரம்

பகவான்–பார்த்த!நல்லதில் விருப்பமுள்ள உனக்கு என் விசேஷ நியமனத்துக்கு இலக்கானவற்றில் முக்கியமானவற்றை மாத்திரம் விளக்குகிறேன். என் விபூதிகள் அளவற்றவை. அவற்றை முழுக்கவும் கூற முடியாது. உன்னால் கேட்கவும் முடியாது.

விஜய!நான் எல்லாப் ப்ராணிகளுடைய இதயத்திலும் இருப்பவனாய் அவர்களுக்கு ஆத்மாவாக விளங்குகிறேன். எல்லா ஜந்துக்களையும் நானே படைக்கிறேன். நானே ரக்ஷிக்கிறேன். அழிப்பவனும் நானே.

அதிதியின் மக்களான பன்னிரு சூரியர்களில் நான் விஷ்ணு.
சோதிகளுக்குள்ளே ஒளிமிக்க சூரியன் நான்.
நக்ஷத்திரங்களுக்கு அரசனான சந்திரன் நான்.
நாற்பத்தொன்பது மருத்துக்களில் நான் மரீசி என்ற மருத்.
வேதங்களுக்குள் நான் ஸாம வேதம்.
தேவர்களுக்குள் நான் இந்திரன்.
இந்திரியங்களுக்குள் நான் மனம்.
ஜந்துக்களுக்கு இருக்கும் அறிவும் நானே.
பதினொரு ருத்திரர்களில் நான் க்ஷேமத்தை உண்டுபண்ணும் சங்கரன்.
யக்ஷர் ராக்ஷஸர் இவர்களுக்குத் தலைவனான குபேரனும் நானே.
வஸுக்கள் எண்மரில் பாவகர் என்ற வஸு நான்.
அழகான கொடுமுடியுள்ள பர்வதங்களில் மேரு பர்வதம் நான்.
மகரிஷிக்களுக்குள் நான் ப்ருகு ரிஷி.
பொருள் உள்ள சொல்லில் ப்ரணவம் நான்.
யஜ்ஞங்களுக்குள் நான் ஜப யஜ்ஞம்.
அசையாப் பொருள்களுள் நான் ஹிமோத்பர்வதம்.
மரங்களுக்குள் நான் அரச மரம்.
தேவரிஷிகளில் நான் நாரதர்.
கந்தர்வர்களுக்குள் நான் அவர்களுக்குத் தலைவனான சித்திரரதன்
தத்துவங்களை அறியுமளவுக்கு யோகஸித்தி பெற்றவர்களுக்குள் கபிலமுனி நான்.
குதிரைகளுக்குள், பாற்கடலில் பிறந்த உச்சைச்ரவஸ் என்ற குதிரை நான்.
யானைகளுக்குள் அமுதத்துடன் உண்டான ஐராவதம் நான்
மனிதர்களுக்குள் நான் அவர்களின தலைவனான அரசன்
ஆயுதங்களுள் நான் வஜ்ராயுதம்.
கறவைகளுக்குள் நான் காமதேனு.
பிரஜைகளை உண்டு பண்ணும் காமமும் நானே.
ஒற்றைத்தலை பாம்புகளில் நான் வாஸுகி
பலதலைப் பாம்புகளில் நான் ஆதிஸேஷன்
நீரில் வஸிக்கும் ஜீவர்களில் வருணன் நான்
பித்ருக்களுக்குள் அர்யமா என்பவன் நான்.
தண்டிப்பவர்களுக்குள் நான் யமதர்மராஜன்
அஸுரர்களுக்குள் நான் ப்ரஹலாதன்.
வில்லாலிகளுள் நான் ஸ்ரீராமன்.
மீங்களுக்குள் நான் மத்ஸ்யராஜாவான மகரம்
பெருகும் ஆறு முதலியவற்றுள் நான் கங்கை.
படைக்கப்பெறுமவற்றைப் படைக்கிற ஜீவனும், அழிக்கின்ற ஜீவனும், காக்கின்ற ஜீவனும் நானே.
கல்விகளுக்குள் ஜீவத்மா, பரமாத்ம விஷயமான வித்யை நான்
சர்ச்சை செய்கின்றவர்களிடமுள்ள உண்மையை உணர்வதற்கான சர்ச்சை நான்
எழுத்துக்களில் நான் அகாரம்
ஸமாஸங்களில் த்வந்த்வ ஸ்மாஸம் நான்
அழியாத காலத்ரவ்யமும் நானே
திசைமுகனான பிரமனும் நானே
எல்லாப் ப்ராணங்களையும் அபகரிக்கும் ம்ருது நானே
உண்டாகப் போகியவற்றின் உத்பத்தியும் நானே

## பத்தாம் அத்தியாயத்தின் பரம ஸாரம்

ஸ்திரீகளுக்குள் ஸ்ரீதேவி, கீர்த்தி, வாக்கு, நினைவு, நுண்ணறிவு, தைரியம், பொறுமை இவையெல்லாம் நானே
ஸாமவேதம் ஓதிய வேதங்களுக்குள் நான் ப்ருஹத் என்ற ஸாமம்
வ்ருத்தங்களுக்குள் நான் காயத்ரி
மாதங்களில் நான் மார்கழி, ருதுக்களுக்குள் வசந்த ருது நான்
வஞ்சிக்ககூடியவர்களில் நான் த்யூதம்
தேஜஸ்விகளில் நான் தேஜஸ்
நான் வெற்றியாகவும், உறுதியான எண்ணமாகவும், ஸாத்துவிகர்களின் பரந்த மனமாகவும் இருக்கிறேன்.
வ்ருஷ்ணி வம்சத்தவர்களில் நான் வஸுதேவ புத்திரன்
பாண்டு புத்திரரகளுக்குள் நான் அர்ஜுனனான நீயே
அறமுறை தவறினோரைச் சிக்ஷிப்பவர் செய்யும் சிக்ஷை நான்
வெற்றியை விரும்புகிறவர்களின் வெற்றிக்கு நல்ல வழியான நீதி நான்
மறைப்பதற்கு ஸாதனமானவற்றில் மௌனம் நான்
சிறந்த அறிவாளிகளின் அறிவும் நானே
உண்டாகும் வஸ்துக்களுக்கெல்லாம் எது விதையோ அதுவும் நானே
ஜங்கமோ ஸ்தாவரமோ இவற்றில் நான் இல்லாத பொருள் இல்லை
அதாவது யாவற்றிலும் நான் வியாபித்திருக்கிறேன்
என்னுடைய திவ்யமான விபூதிகளுக்கு அதாவது நியாம்ய வஸ்துக்களுக்கு அளவே கிடையாது. என்னுடைய விபூதியின் பிரிவு தோராயமாகவே கூறப்பெற்றது

எவர் சொற்படி பலர் நடக்கின்றனரோ அவரிடம் என் அம்சம் இருக்கிறது
அழகு அல்லது செல்வம் ,நல்ல முயற்சி போன்ற சிறப்புக்கள் எது இருந்தாலும் அதையும் என்னுடைய அம்ஸமாக தீர்மானித்துக் கொள். அதாவது என்னுடைய தேஜஸ்ஸின் சிறு துளியினின்று உண்டானதாகக் கருது.

அர்ஜுன! கீழே கூறிய விரிவினால் உனக்கு ஆகக் கூடியது ஏதுமில்லை.
சராசரமான ப்ரபஞ்சங்கள் அனைத்தையும் என்னுடைய ஸங்கல்ப லவேசத்தினால் தாங்கிக்கொண்டு வியாபித்து இருக்கிறேன். இந்த ஸாராம்சத்தை நீ அறிந்தால் போதுமானது

பத்தாம் அத்தியாயத்தின் பரம ஸாரம் முற்றும்